## சட்டமன்றத் தேர்தல் :

# 9 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!







சென்னை, மார்ச் 1-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

9வது நாளாக நேற்று (28.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

9வது நாளான நேற்று (28.02.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை தொழிலாளர் அணி செயலாளர் பிடிசிஜி.செல்வராஜ், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப் படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

# கொள்கைத்தேர் நீசெலுத்து!



அஞ்சுகச் செல்வரின் அருந்தவப் புதல்வனே!
அரசியல் செருக்க ளத்தில்
ஆயிரம் நெருக்கடி வந்தாலும் சந்திக்கும்
ஆளுமை மிக்க தலைவா!
செஞ்சுடர்க் கதிர்போலும் வெஞ்சமர்க் களம்காணும்
சிங்கமே! தோளு யர்த்து!
சினவேங்கை நடைபோடும் இனமான வீரர்தம்
சேனையை வழிந டத்து!
கொஞ்சுதமிழ்க் கலைஞரின் நெஞ்சுரம் பெற்றவன்!
குறுக்கிடும் தடைத கர்த்துக்
குரைப்பவர் வசைஅள்ளி இரைப்பவர் நாணவே
கொள்கைத்தேர் நீசெ லுத்து!
வஞ்சகரின் சதிவலை அறுத்தெறி! சிலிர்த்தெழு!
வைகறை இருள்கி ழித்து
வழிகாட்டு! நிலமெங்கும் ஒளியேற்று! தமிழர்தம்
வரலாற்றை நிலைநி றுத்து!

காலத்தின் கொடையான தகவல் தொழில்நுட்பக்
கலையினைப் போற்று கின்றாய்!
கவின்மிகும் ஆட்சியால் உலகத்தின் பார்வையில்
கழகத்தை ஏற்று கின்றாய்!
கோலச்செந் தமிழ்எங்கள் உயிர்,உணர் வென்றுநீ
குறிக்கோளைச் சாற்று கின்றாய்!
கொட்டாவி விடுகின்ற கோழையினை யும், வீரக்
குரிசிலாய் மாற்று கின்றாய்!
மூலத்தை வேர்களின் ஆழத்தைப் பழந்தமிழ்
மொய்ம்பினை உணர்த்து கின்றாய்!
முதுகு வளைந்தவர் தண்டு வடங்களை
முறுக்கேற்றி நிமிர்த்து கின்றாய்!
ஞாலத்தில் இப்படிஓர் தலைவன்,எக் கட்சிக்கும்
நாடெங்கும் வாய்ப்ப தில்லை!
நாளைய வெற்றிக்கும் துணைநிற்கும் தொண்டரின்
நம்பிக்கை தோற்ப தில்லை!

இன்றல்ல! நேற்றல்ல! "எழுபத்தைந் தாண்டுகள்"
இடர்பல கண்ட கழகம்!
ஏச்சுக்கும் திராவக வீச்சுக்கும் அஞ்சாமல்
எதிர்மோதி வென்ற கழகம்!
ஒன்றல்ல! இரண்டல்ல! உடுக்கள்போல் வடுக்களை
உடம்பெங்கும் கொண்ட கழகம்!
உட்பகை, வெளிப்பகை அத்தனையும் தூளாக்கி
உலாவரு கின்ற கழகம்!
குன்றல்ல! மிகப்பெரும் மலைகளை நொறுக்கியே
கோட்டைக்குச் சென்ற கழகம்!
குனியாமல் எவருக்கும் பணியாமல், செம்மாந்து
கோலோச்சி நின்ற கழகம்!
கன்றல்ல நடுதற்கு! விழுதூன்றி வேர்விட்டுக்
காலூன்றி நிமிர்ந்த கழகம்!
காளான் குடைக்குக்கீழ் முளைக்கின்ற புற்களா
கழகத்தை வீழ்த்த முடியும்?

இழுக்காகி மனமெங்கும் அழுக்காகிப் போனவர்,நம்
இயக்கத்தைத் தூற்றி வரலாம்!
"இலட்சிய மறவன்"நின் "நல்லாட்சி" பொறுக்காமல்
எரிச்சலில் பேட்டி தரலாம்!
பழுக்கின்ற இடம்தேடிக் கொழுக்கின்ற பேர்கள்,உன்
பாதையில் முட்கள் இடலாம்!
பரம்பரைக் குணம்விட்டுப் போகாத ஏடுகள், பொய்ப்
பரப்புரை அவிழ்த்து விடலாம்!
வழக்கம்போல் இங்கொரு நரிக்கூட்டம், இருட்டுக்கு
வரவேற்பு மாலை யிடலாம்!
"வானத்துச் சூரியன்" காணாமல் போகும்என
வாலாட்டி ஊளை யிடலாம்!
கிழக்கை வெளுக்கின்ற உதயமே! முழுவீச்சில்
கிளம்பு! நீ முரசு முழங்கு!
கீழ்வானம் சிவக்கட்டும்! பிறந்தநாள் வாழ்த்தொலி
கேட்கட்டும்! எழுச்சி வழங்கு!

எண்ணற்ற களங்கள்!நம் எதிரிகள், துரோகிகள்
இணைகின்ற காட்சி அறிவோம்!
எங்கேயோ ஒளிந்துகொண்டு அம்புகளை நம்மீதில்
எறிகின்ற சூழ்ச்சி அறிவோம்!
கண்ணுக்குள் மணிபோலும் கட்சியை, ஆட்சியைக்
காத்துநீ நடப்ப தறிவோம்!
கைகளில் மலர்கொண்டு திசைகள்உன் வரவுக்குக்
காத்துக் கிடப்ப தறிவோம்!
அண்ணாவைக் கலைஞரை உள்வாங்கிக் கொண்டநின்
ஆட்சியின் மாட்சி அறிவோம்!
அன்னைநம் தமிழுக்கும் தமிழர்க்கும் உனையன்றி
யார்இங்கே காவல்? அறிவோம்!
உண்ணாமல் உறங்காமல் உழைத்திடும்தியாகத்தை
ஒருபோதும் நெஞ்சில் மறவோம்!
உயிர்வேண்டும் என்றாலும் தருவோம்! இறுதிவரை
உன்னோடு நாங்கள் வருவோம்!

**கவிச்சுடர்.**
**கவிதைப்பித்தன்**



